**தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 22 நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 04 ஆம் திகதி நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 14.14 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 11.86 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2.28 மில்லியன் அதாவது 16.12 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 13.64 | 11.83 | 1.81 | 13.27 |
| மூலதனம் | 0.50 | 0.03 | 0.47 | 94.00 |
| மொத்தம் | 14.14 | 11.86 | 2.28 | 16.12 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அலுவலகத்திற்குரிய 02201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 0.88 | 0.81 | 0.30 | 0.46 | 3.00 | 2.09 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அலுவலகத்தின் கட்டுநிதி கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 303,938 ஆக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அலுவலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கணனி, உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.2.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலவலகத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டில் அலுவலகத்தின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பரீட்சித்து அறிக்கையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட 421 முறைபாடுகள், 2015 ஆம் ஆண்டின் போது அலுவலகத்திற்கு நேரடியாகக் கிடைத்த 962 முறைபாடுகள் மற்றும் மக்கள் செயற்குழுவினால் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட 158 முறைப்பாடுகளுடன் மீளாய்வாண்டின் போது பரீட்சிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் 1,541 முறைப்பாடுகள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 58 முறைப்பாடுகள் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக வேறு தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. 536 முறைப்பாடுகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அகற்றப்பட்டிருந்தது. கலந்தாலோசிக்கப்பட்ட போதும் முறைப்பாட்டாளருக்கு அறிவித்ததன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுத்தி வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 388 ஆகும்.

(இ) பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படாது 73 முறைப்பாடுகள் சமரசத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 27 முறைப்பாடுகள் தொடர்பாக உள்ளக தரப்பினர் புலனாய்வை மேற்கொண்டு பரீட்சித்து அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பரிசோதனைகளை நடாத்துவதற்கும் அறிக்கையிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 459 ஆகும்.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 18 | 12 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 09 | 04 | 05 |
| | மொத்தம் | 30 | 18 | 12 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 12 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்த போதிலும் அந்த சேமிப்பு தொடர்பில் பதவியணியினர்களின் வெற்றிடம் தாக்கமளித்திருக்கவில்லை.